# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
# Department of Treasury Operations

මුදල් අමාත්‍යාංශය, මහලේකම් කාර්යාලය, තැ.පෙ.1559, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
நிதி அமைச்சு, செயலகம், தபெ. 1559, கொழும்பு 01, இலங்கை
Ministry of Finance , The Secretariat, P.O.Box: 1559, Colombo 01. Sri Lanka.

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம்; / Director General: 0094112484729 dgto@tod.treasury.gov.lk
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 0094 112 484970
පොදු / பொது / General: 0094 112 484500, 0094 112 484600


මගේ අංකය / எனது இல / My No.: TO/REV/M2/07/2010
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Date: 2015.05.

**திறைசேரி செயற்பாட்டுச் சுற்றறிக்கை இலக்கம் : 02/2015**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் அனைவருக்கும்,

**<u>2015.06.30 அன்றுள்ளவாறு நிலுவை வருமான அறிக்கை.</u>**

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் : 01/2002 மற்றும் 2002.07.17 ஆம் திகதிய சுற்றறிக்கை மற்றும் அதன் மீதான திருத்தங்கள் தொடர்பில் தங்களது மேலான கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. அதற்கமைய, வருமனக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நி.பி.128(2)(இ) இலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தமது பொறுப்பின் கீழுள்ள வருமானக் குறியீடுகளுக்கு அமைய நிலுவை வருமானக் கணக்கு அறிக்கையினை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் பின்வரும் வருமானக் குறியீட்டு இலக்கங்களின் கீழ் ஒன்று திரட்டப்படுகின்ற நிலுவை வருமானம் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்களை திரட்டி நிலுவை வருமானக் கணக்கு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

| <u>வருமான தலைப்பு குறியீட்டு இலக்கம்</u> | <u>விபரம்</u> |
|---|---|
| 20.02.01.99 | அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானங்கள் - ஏனைய வாடகைக்கள் |
| 20.02.02.99 | வட்டி - ஏனையவை |
| 20.03.01.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - திணைக்கள விற்பனைகள் |
| 20.03.02.99 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - நிருவாக கட்டணங்கள் - நானாவித |
| 20.03.03. 02 | விற்பனை மற்றும் கட்டணங்கள்- தண்டப் பணம் மற்றும் அரசவுடமையாக்கள் - ஏனையவை |
| 20.03.99.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - ஏனைய பெறுகைகள் |
| 20.05.99.00 | நடைமுறை மாற்றல்கள் - தேசிய லொத்தர் சபையும் ஏனைய மாற்றல்களும் |
| 20.06.02.00 | மூலதன வருமானம் - மூலதனச் சொத்துக்களின் விற்பனை |

03. ஆகவே, மேற்குறித்த வருமானக் குறியீட்டு இலக்கங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புற்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு அமைய, வருமான குறியீட்டு இலக்கங்களுக்கான நிலுவை வருமானம் கணக்கு அறிக்கைகளுடன் முறையாக ஒப்பீடு செய்யப்பட்டு அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் : 01/2002 மற்றும் அதன் மீதான தீருத்தங்கள் மூலம் காட்டப்பட்டவாறான மாதிரிப் படிவம் இல TOD/REV/01 க்கு அமைய தயாரிக்கப்பட்ட 2015.06.30 அன்றுள்ளவாறான நிலுவை வருமானக் கணக்கு அறிக்கையினை 2015.07.13 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவாய் வேண்டிக்கொள்கிறேன். குறித்த தினத்தன்று நிலுவை வருமானங்கள் ஏதும் இல்லாத பட்சத்தில் தயவு செய்து வெற்றுக் கணக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கவும்.

04 . மேலும் , ஒவ்வொரு ஆண்டுடனும் தொடர்புபற்ற நிலுவை வருமானத்திற்கு நேரொத்த வகையில் 2014 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட வருமானங்கள் தொடர்பான விபரங்கள், அக்காலப்பகுதியினுல் நி.பி. 113 க்கு அமைய திறைசேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதலுக்கு அமைய விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு வருமானம் சம்பந்தமான விபரங்கள என்பனவும் மாதிரிப் படிவம் இல TOD/REV/02 என்ற படிவத்திலும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**ஒப்பம்/எம்.எஸ்.டீ. ரனசிறி**
**பணிப்பாளர் நாயகம்**
**திறைசேரி செயற்பாட்டுகள் திணைக்களம்ப**

பிரதிகள் : 1. கணக்காய்வாளர் நாயகம்.
2. பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்.


*Additional Director General (Foreign Aid , Public Debt, Admin & Finance )* — Tel : 0094 112 484738, Fax : 0094 112 320042, herath200@gmail.com
*Additional Director General (Consolidated Fund Mgt, Revenue & Reforms.)* — Tel : 0094 112 484748, Fax: 0094 112 484970, anandar@tod.treasury.gov.lk
*Director (Cash Management)* — Tel: 0094 112484901, Fax: 0094 112 484970, namalb@tod.treasury.gov.lk
*Director (Consolidated Fund Mgt)* — Tel: 0094 112 484994, Fax: 0094 112 484970, dilipl@tod.treasury.gov.lk
*Director (Revenue)* — Tel: 0094 112484638, Fax: 0094 112 484970, anandak@tod.treasury.gov.lk
*Director (Foreign Aid Mgt)* — Tel: 0094 112484751, Fax: 0094 112320042, sarathk@tod.treasury.gov.lk
*Director (Debt Mgt)* — Tel: 0094 112484749, Fax: 0094 112320042, damithak@tod.treasury.gov.lk

# நிலுவை வருமானம் பற்றிய அறிக்கை – 2015.06.30

(i) சட்டம் / அதிகாரம் :- (தொடர்புடைய சட்டவாக்கங்கள் அல்லது சுற்றுநிருப அறிவுறுத்தல்கள்)

(ii) சட்டம் / அதிகாரம் :- (சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் அல்லது நிறுவனங்கள்)

(iii) வருமான வகை:-

(iv) வருமானப் குறிஇலக்கம் :-

| விபரம் | நிலுவை வருமானம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012.12.31 வரையான நிலுவைத் தொகை ரூபா. | 2013 ஆம் ஆண்டிற்கான திரட்டிய நிலுவைத் தொகை ரூபா. | 2014 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை ரூபா. | 2015.06.30 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை ரூபா. | 2015.06.30 அன்றுள்ளவாறு மொத்த நிலுவைத் தொகை (2+3+4+5) ரூபா. | நிலுவைக்கான காரணம் * | நிலுவைத் தொகையினை மீளஅறவிடுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை * | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்குள்ள இயலுமை பற்றிய சான்றிதழ் * |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | | | | |

2014.12.31 திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கை மூலம் இந்நிரல்களின் கீழ் அறிக்கையிடப்பட்ட ஒவ்வொரு நிலுவை வருமானங்களும் மேலே உள்ள அட்டவணையின் நிரல் இலக்கம் 2 - 4 வரையும் 2015 ஆம் ஆண்டில் அறவீடுகள் ஏதும் இருப்பின், அவை கழிக்கப்பட்டு பின்னர் கிடைக்கப் பெறும் மீதியோடு இந்நிரல்களின் கீழ் காட்டப்படும் கூட்டுத் தொகையும் சமப்படுதல் வேண்டும். அவ்வாறின்றேல், குறித்த வேறுபாட்டிற்குறிய விரிவான விளக்கம் இணைப்பாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

* நிரல் இல. 7, 8 மற்றும் 9 ஆகியவற்றைப் பூர்த்திசெய்வது கட்டாயமானதாகும்.

**சரியானதென உறுதிப்படுத்துகிறேன்**

**திகதி :-**

.........................................................

செயலாளர்/திணைக்களத் தலைவர்/மாவட்டச் செயலாளர்
(அலுவலக முத்திரை)

இணைப்பு : TOD/REV/02

# நிலுவை வருமானத்தை சேகரித்தல் பற்றிய அறிக்கை – 2015.06.30

அமைச்சு/ திணைக்களம் : வருமான குறியீட்டு இலக்கம் :

| விபரம் | 2015 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தினைத் திரட்டுதல் | | | | * 2015 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தினை விடுவித்தல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2012.12.31 வரை | | 2013 | | 2014 | | |
| | 2012.12.31 வரையான நிலுவை தொகை | 2013 ஆம் ஆண்டிற் குரிய நிலுவைத் தொகை | 2014 ஆம் ஆண்டிற் குரிய நிலுவைத் தொகை | மொத்த நிலுவைத் தொகை (2+3+4) | நிலுவைத் தொகையினை விடுவித்தல் | நி.பி 113 ற்கு அமைய விடுவிப்புச் செய்ய பொது திறை சேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் மேற்கோள் இலக்கமும் திகதியும் | ஆண்டில் நிலுவைத் தொகைக்கு அமைவான மொத்த விடுவிப்புகள் | நி.பி 113 ற்கு அமைய விடுவிப்புச் செய்ய பொது திறை சேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் மேற்கோள் இலக்கமும் திகதியும் | ஆண்டில் நிலுவைத் தொகைக்கு அமைவான மொத்த விடுவிப்புகள் | நி.பி 113 ற்கு அமைய விடுவிப்புச் செய்ய பொது திறை சேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் மேற்கோள் இலக்கமும் திகதியும் | நிலுவைத் தொகைக்கு அமைய விடுவிக்கப்பட்ட மொத்த தொகை (8+9+10) |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | | ரூபா. | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | | | | | | | | | | | |

* வருமான குறியீட்டு இலக்கம் ஒவ்வொன்றின் கீழும் வரும் ஏதேனுமொரு வருமானத்தினை விடுவிப்பதற்காக நி.பி. 113 க்கு அமைய பொது திறைசேரியின் முன் அனுமதி பெறப்படுதல் வேண்டும். ஆதலால், பொது திறைசேரி (அரச நிதி திணைக்களம்) ஆல் விடுவிப்புச் செய்ய பெறப்பட்ட ஒப்புதல் இங்கு குறிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்காகப் பெறப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் பிரதி ஒவ்வொன்றும் இத்தோடு இணைக்கப்படுதலும் வேண்டும்.

**திகதி:…………………..**

**மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் சரியானதென உறுதிப்படுத்துகிறேன்**

**……………………………………………**

**செயலாளர்/திணைக்களத் தலைவர்/மாவட்டச் செயலாளர்**
**(அலுவலக முத்திரை)**